# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 17 வியாழக்கிழமை (31.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 185


# போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து அரசு முடிவுசெய்யவேண்டிய காலம் வந்துவிட்டது

## இன்றைய தள நிலையில் அது அர்த்தமற்றதாகி விட்டதாக அறிவிப்பு



கொழும்பு,மே31

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தான போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்துத் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவேண்டிய காலம் கனிந்துவிட்டது.

ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்தில் நிலவிய சூழ்நிலைக்கும் இன்றைய தள நிலைமைக்கும் இடையில் பெரும் வேறுபாடு உள்ளது.

ஆகையால், போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதா என்பது குறித்து அடுத்த வாரத்தில் விசேட பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளோம்.

அரசாங்கத்தின் சார்பில் இந்தத் தகவலை வெளியிட்டார் அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல.

நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் இதுகுறித்துச் சொன்னதாவது-

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கைச்சாத்தான போர்நிறுத்த ஒப்பந்தம் இப்போது பொருத்தமற்றதாகி விட்டது.

அன்றைய சூழ்நிலைக்கும் இன்றைய தள நிலைக்கும் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடு உண்டு. அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதால் நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்கும் என்று எண்ணத்தோன்றவில்லை.

இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டும்; அரசாங்கம் கிழித்தெறியவேண்டும் என்று சிங்களத் தேசியவாதிகள் அரசுக்குப் பெரும் அழுத்தம் கொடுத்துவருகிறார்கள்.

அதற்கான காலம் வந்துவிட்டதாகவே கொள்ளவேண்டியுள்ளது. இது குறித்து ஆராய்ந்து முடிவுக்கு வருவதற்கான பேச்சுக்களை அடுத்த வாரத்தில் நடத்தவுள்ளோம்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து நடத்திவரும் குண்டுத்தாக்குதல்களுக்கு அரசாங்கம் பதிலடி கொடுத்துவருகிறது. - என்றார். (அ-1)

# இந்தியாவிடம் இராணுவத் தளபாட உதவி புதுடில்லியில் கோத்தபாய கோரிக்கை

## ஒரு தொகுதி பொருள்கள் விமானத்தில் வந்தனவாம்



கொழும்பு,மே 31

விடுதலைப் புலிகளினால் ஏற்பட்டுள்ள புதிய அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்காக இலங்கைக்கு இராணுவத் தளபாட உதவிகளை வழங்கும்படி இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ நேரடியாகப் புதுடில்லிக்குச் சென்று இந்திய அரசைக் கோரியிருக்கின்றார். பாக்கு நீரிணையில் - சர்வதேசக் கடல் எல்லைப்புறத்தில் - இந்திய - இலங்கைக் கடற்படைகளின் கூட்டு ரோந்து மேற்கொள்ளவும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

அவரது கோரிக்கைக்கு அமைய சில இராணுவத் தளபாடங்கள் அடங்கிய இந்திய விமானம் ஒன்று கொழும்புக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வந்து அப் பொருள்களை வழங்கிவிட்டுச் சென்றிருக்கின்றது.

புதுடில்லி செய்தி நிறுவனங்கள் இவ் விவகாரம் குறித்துப் பரபரப்புத் தகவல்களை வெளியிட்டிருக்கின்றன.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய

(06ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் நேற்றும் வான்தாக்குதல்

கொழும்பு, மே 31

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பின் தெற்குப் பகுதியில் நேற்றும் விடுதலைப்புலிகளின் ஆயுதக் களஞ்சியம் மீது தாக்குதல் நடப்பட்டது என ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இத்தாக்குதல் இரண்டாவது நாளாக நேற்றும் மேற்கொள்ளப்பட்டது என்றும் இத்தாக்குதலில் விடுதலைப்புலிகளின் முக்கிய ஆயுதகளஞ்சியம் முற்றாக அழிக்கப்பட்டது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் அந்தப்

(06ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஆயுத உதவியை இந்தியா வழங்கக் கூடாது

### டாக்டர் ராமதாஸ் கோரிக்கை

சென்னை,மே 31

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்வதற்காக ஆயுத உதவிகளை இந்திய மத்திய அரசு வழங்கக் கூடாது என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் எஸ்.இராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

அவர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆயுதக் கொள்வனவுக்காக டில்லி வந்துள்ளதாக அறிகின்றோம்.

மத்திய அரசு ரடார்களையோ, விமான எதிர்ப்பு சாதனங்களையோ இலங்கைக்கு வழங்கக் கூடாது. அவ்வாறு வழங்கப்படும் ஆயுதங்கள் அப்பாவி மக்களைக் கொல்வதற்கே மறைமுகமாக உதவும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலம் தீர்வு காணுமாறு அந்நாட்டு அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும். அவ்வாறு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முன்வராவிட்டால், இந்தியா வரும் இலங்கை அரசுத் தலைவர்களைப் புறக்கணிக்க வேண்டும்- என்றுள்ளது.

## ஓமந்தை ஊடான போக்குவரத்து நேற்று வழமைக்குத் திரும்பியது

கிளிநொச்சி, மே 31

ஏ-9 பாதையில் ஓமந்தை சோதனை நிலையம் ஊடான போக்குவரத்து எட்டு நாள்களின் பின்னர் நேற்று வழமைக்குத் திரும்பியது.

கடந்த 22ஆம் திகதி ஓமந்தை சோதனைச் சாவடியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை அடுத்து இந்தப் பாதை ஊடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

பாதையைத் திறப்பது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் அரசு அதிகாரிகளுடனும் பேச்சுகளை நடத்தினர்.

அவற்றின் பயனாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரசன்னத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு சோதனை நிலையம் திறக்கப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் வாகனப் போக்குவரத்து நேற்று இடம்பெற்றது.

உயிலக்குளம் ஊடான போக்குவரத்தும் நேற்று வழமைபோல் இடம்பெற்றது.

ஓமந்தை மற்றும் உயிலங்குளம் (06ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரத்தில் இன்று பொசன் விழா; புலிகளின் தாக்குதல் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, மே 31

அநுராதபுரத்தில் இன்று பொசன் போயா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் புலிகள் அங்கு குண்டுத்தாக்குதல் நடத்தலாம் என்றும் மக்கள் அங்கு விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க எச்சரித்திருக்கிறார்.

நேற்று ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

புலிகள் மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். கொழும்பில் இரண்டு குண்டுத் தாக்குதல்களை நடத்தி விட்டனர். இரண்டு தாக்குதல்களும் மக்களைக் குறிவைத்தே நடத்தப்பட்டுள்ளன.

மக்கள் இதுவரை விழிப்பாக இருந்ததன் காரணமாகவே புலிகள் நடத்தவிருந்த பல தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. மக்களின் தகவல்களால் பல இடங்களில் குண்டுகள் மீட்கப்பட்டன.

புலிகள் தொடர்ந்தும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதையே இலக்காகக் கொண்டுள்ளனர். இத்தாக்குதல்களை முறியடிக்க மக்கள் தொடர்ந்தும் விழிப்பாக இருக்க வேண்டும்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## மடுவில் முன்நகர்வு முயற்சி முறியடிப்பு

கிளிநொச்சி, மே 31

மன்னார் மாவட்டத்தில் மடுப்பகுதி ஊடாக நேற்று அதிகாலை 6 மணிக்கு மேற்கொண்ட முன்நகர்வு முயற்சியைத் தாம் முறியடித்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். இத்தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர் என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

படையினர் எமது பகுதியை நோக்கி முன்னேற முயன்றனர். எமது படையணிகள் தடுத்து நிறுத்தித் தாக்குதல் நடத்தின. படையினர் இழப்புகளுடன் தமது பழைய நிலைக்குத் திரும்பினர். எமது தரப்பில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை - என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு எம். பிக்கள் பலர் ஊக்கமளிக்கின்றனராம்

### அமைச்சர் ரம்புக்வெல குற்றச்சாட்டு

கொழும்பு,மே 31

''புலிகள் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் மேற்கொண்டுவரும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அவர்களின் மறைமுகமான ஆதரவே புலிகள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபடக் காரணம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றில் விடுக்கின்ற அறிக்கைகள் இதனை மெய்ப்பிக்கின்றன.''

- இவ்வாறு அமைச்சரும் அரச பாதுகாப்புப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடும்போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

புலிகள் வடக்கு - கிழக்கில் சந்தித்து வரும் தோல்விகளை மூடி மறைப்பதற்காகவே தெற்கில் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சியில் ஷெல் வீச்சு பொதுமகன் பலி!

கொழும்பு,மே 31

முகமாலையில் உள்ள படைத் தரப்பினது பின்தளத்தில் இருந்து இயக்கச்சி நோக்கி படையினர் மேற்கொண்ட ஷெல் வீச்சில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொதுமக்கள் வாழும் இடங்கள் மீதே படையினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின்போது பாலசுப்பிரமணியம் (வயது - 43) என்பவரே கொல்லப்பட்டுள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் அதிபர்

**செல்வி ம.அன்ரனி சாந்தா**

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணிப் பரீட்சையில் (M.Edu.) சித்தியடைந்தமையையிட்டு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்வடைகின்றோம்.

ஆசிரியர் சமூகம்,
(61127) யா/இளவாலை றோ.க.த ஆண்கள் பாடசாலை.

---

இறையன்பும் பராமரிப்பும் என்றென்றும் வேண்டி

**வாழ்த்துகின்றோம்**

## அருட்தந்தை கலாநிதி ம.பெ.ஞானரத்தினம்



அவர்கள் பற்றிமா அன்னையின் பரிவோடு "உரோமையில்" கல்வியை நிறைவு செய்து, கலாநிதிப் பட்டம் பெற்றமையையிட்டு பெருமை கொண்டு, பற்றிமா அன்னைக்கு நன்றி கூறி மேலும் அவள் அவர் கரம் பிடித்து வழிநடத்த அருள்வேண்டி அவரின் பணி சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ம.இரத்தினசோதி, ம.சே.கருணாரத்தினம்,
அ.புஸ்பராசா குடும்பம்
(நீர்கொழும்பு). (61109)

---


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!

PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎: 0112334603

கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:-
சிவா நறுமணைப் பண்டகசாலை (?)
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567


---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - போஜோ

(ஊடகவியலாளர் கல்வியியல் நிறுவகம், கல்மார், சுவீடன்)

**கலைப்பீடம்**

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்**

### இதழியலில் பகுதிநேர (ஈராண்டு) டிப்ளோமாக் கற்கைநெறி

பகுதிநேர இதழியல் டிப்ளோமாக் கற்கைநெறியினை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் கற்க விரும்பும் பணிசெய்யும் ஊடகவியலாளரிடமிருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. விண்ணப்பஞ்செய்பவர்கள்:

- ★ க.பொ.த. (சா.த) தேர்வில் சித்தியடைந்திருக்கவேண்டும்
- ★ அச்சு ஊடகத்தில் அல்லது மின்னியல் ஊடகத்தில் ஓராண்டு அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.
- ★ பணிசெய்யும் ஊடக நிறுவனத்திலிருந்து இக்கற்கைநெறியிற் சேர்வதற்கான அனுமதிக் கடிதம் சமர்ப்பிக்கவேண்டும்.

**கற்கைநெறிக்காலம்:** 2ஆண்டுகள் (விரிவுரைகள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் (சிலவேளை அரச விடுமுறை நாள்களிலும்) நடைபெறும்.

**கற்கைநெறிக்கட்டணம்**

| | |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | 100.00 ரூபா |
| பதிவுசெய்தல் | 500.00 ரூபா |
| கற்கைநெறி | 4,000.00 ரூபா |
| நூலகப் பயன்பாடு | 500.00 ரூபா |
| நூலக வைப்புப் பணம் | 1,000.00 ரூபா |

விண்ணப்பிக்க விரும்புபவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதிக்கிளைக் கருமபீடத்தில் ரூபா 100/- செலுத்திப் பற்றுச்சீட்டினைப் 84, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம் முகவரியிலுள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.


நிறைவுசெய்யப்பட்ட விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு 15.06.2007 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி 52518) **பதிவாளர்.**

---

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை இராசம்மா



4ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்துரை இராசம்மா நேற்று (30.05.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தை சின்னத்துரையின் அன்பு மனைவியும் சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், அரியமலர், இந்திரலிங்கம் (ராசன்), செல்வமலர், சுந்தரலிங்கம் (ஐயன்), சிவமலர், அற்புதமலர் ஆகியோரின் அன்புத் தாயும் விக்கினேஸ்வரி, மேரிமெற்றலீன், ஆறுமுகம், இராஜேஸ்வரி, நாகேந்திரம், மரியகிறேஸ், அத்துல, கயேந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் மகேஸ்வரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2007) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4ஆம் கட்டை,*
*ஆனைக்கோட்டை.* (61124)

தகவல்:
**சி.இந்திரலிங்கம்** (ராசன் - மகன்).

---


**மனோகரா** யாழ்ப்பாணம்

வெகு விரைவில்.......!
சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்த், ஸ்ரேயா மற்றும் பலர் நடித்த

**சிவாஜி**




---

## புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு

புறொயிலர் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு.
நல்லூர் பாம்,
19, முருகேசர் லேன், நல்லூர். (61114)

---

## விற்பனைக்கு

P4 கணனி
Microlab woofer 2.1
றஞ்சனாஸ்,
383, K.K.S. Road, சிவன்கோயிலடி, யாழ்ப்பாணம். (61180)

---

## தவறிவிட்டது

ஏழாலை மத்தி, ஏழாலையைச் சேர்ந்த முருகையா தனுஷா என்பவருடைய தே.அ.அட்டை (837652480V), காப்புறுதிப் பத்திரம் மற்றும் வரிப் பத்திரம் என்பன அடங்கிய கைப்பேசுடன் சுன்னாகம், அந்தோனியார் வீதிச் சந்திக்கும் ஐயனார் வீதிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இலக்கம் 5, ஐயனார் வீதி அல்லது ஜெயகிருஷ்ணா காட்வெயர், சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

தொ.பே.: 222 5411, 222 5321

---

## கண்ணீர்க் காணிக்கை

எமது சபை முன்பள்ளியின் முன்னாள் ஆசிரியை திருமதி ஐங்கரன் சாந்தமலர் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

**அப்புத்துரை அருமைத்துரை**

மற்றும் எமது சபையின் அறநெறிப் பாடசாலை ஆசிரியை செல்வி தனாகனி தருமலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

**கந்தையா தருமலிங்கம்**

ஆகியோரின் பிரிவால் துயறுரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மசாந்திக்கு எல்லாம்வல்ல இணுவைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

சைவப் பணிமனை,
இணுவில் கந்தசுவாமி கோயில்
இளந்தொண்டர் சபை.

---


புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**

ஒருவருடகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Nambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee 2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee 3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System (Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee 3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System (Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee 2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 04/06/2007- 9.00AM

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 01/06/2007, 02/07/2007, 03/06/2007, 06/06/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

சர்வதேசரீதியில் (இலங்கையிலும்) முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Company Accounts இனையும் உள்ளடக்கி

3Months **Diploma in Computerized Accounting**

**ACCPAC + Quick Books Premier + MYOB**

Course Contents
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting

வகுப்புக்கள் ஆரம்பம்:
Batch I : 02/06/2007
Batch II : 03/06/2007
BatchIII : 07/06/2007
Batch IV: 09/06/2007


---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 04 . 08 . 1940 — மறைவு 02 . 05 . 2007

அமரர்

## செல்லையா பூவிலிங்கம்

(ஓய்வுபெற்ற முகாமையாளர் - ப.நோ.கூ.சங்கம், வலி.கிழக்கு, நீர்வேலி)

கடந்த 02.05.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (01.06.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*77/1, விநாயகர் வீதி,*
*நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.* குடும்பத்தினர்.

---

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

885 நீலம்

வெற்றி இலக்கங்கள்

துலாம் **02 07 41 54**

**29-05-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4062758 - 4076983

ஜக்பொட் -பரிசு ரூபா.3,085,650/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 311,024 | 10/- | 3,110,240/- |
| 2 இலக்கங்கள் | 28,613 | 20/- | 572,260/- |
| 1 இல. + லக்கினம் | 28,354 | 30/- | 850,620/- |
| 2 இல. + லக்கினம் | 2,570 | 100/- | 257,000/- |
| 3 இலக்கங்கள் | 757 | 500/- | 378,500/- |
| 3 இல. + லக்கினம் | 75 | 5,000/- | 375,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,085,650/- | 3,085,650/- |
| மொத்தம் | | | 8,829,270/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 371,401 | | 9,852,770/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5932355 க்கு மேற்பட்ட சிறப்பு திற டிக்கட்டுக்கள் 2007 ஜூன் மாதம் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருநாகல் | 4065873-0-48 |
| அம்பாறை | 4066365-6-03 |
| கண்டி | 4063434-7-60 |
| மொனராகலை | 4066511-8-69 |
| களுத்துறை | 4073699-4-08 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

---


# Brown & Company Ltd.

**SHARP** அலுவலக மின்பாவனைப் பொருள்கள்



- ❑ SHARP போட்டோப் பிரதி இயந்திரம் (Digital Photo Copier)
- ❑ SHARP Fax Machine
  - ★ நியாயமான விலை
  - ★ ஒரு வருடம் அல்லது 50000 பிரதிகளுக்கு உத்தரவாதம்
  - ★ விற்பனைக்கு பிந்திய தரமான சேவை



கையிருப்பு உள்ளவரை மட்டுமே

மற்றும்
- ★ SHARP A/C (Split Type, 24000BTU)
- ★ எலக்ரிக் & மைக்ரோவேவ்
- ... சிறந்த விலைக்கழிவில் வழங்கப்படும்.
- ★ A/C ... மற்றும் Service செய்து கொடுக்கப்படும்.

T.P.: 021 222 4040
077 6623824.

(61106)

Brown & Company Ltd,
89, Stanley Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற் புலிகளால் இந்தியாவுக்கு எப்போதும் அச்சுறுத்தல் உண்டு

## பாதுகாப்புச் செயலர் எம்.கே.நாராயணன் கருத்து



புதுடில்லி.மே31

கடற்புலிகளால் எப்போதும் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் உண்டு. எந்தவொரு தீவிரவாத இயக்கமும் வான் வழி, கடல் வழித்தாக்குதல் திறன் பெற்றிருந்தால் அது இந்தியாவுக்குக் கவலையளிக்கும் விடயம்தான்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியாவின் தேசிய பாதுகாப்புச் செயலர் எம்.கே.நாராயணன்.

தமிழக மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவது, கடத்தப்படுவது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக தமிழக முதல்வர் மு.கருணாநிதியை கடந்த 29 ஆம் திகதி புதுடில்லியில் சந்தித்துப் பேசினார் எம்.கே.நாராயணன்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் நாராயணன் தெரிவித்ததாவது:-

தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற் கொள்ளும்.



இலங்கைக் கடற்படையுடன் இணைந்து கடலில் கூட்டுரோந்து மேற்கொள்வதற்கு வாய்ப்பில்லை. ஆயினும் ஒருங்கிணைந்த ரோந்துப் பணியை மேற்கொள்ள முடியும் அதற்காக இலங்கையின் கருத்தையும் பெறவேண்டும்.

கடற்புலிகளால் எப்போதும் அச்சுறுத்தல் உண்டு. எனவே பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

புலிகள் இயக்கம் ஒரு தீவிரவாத இயக்கம். எனவே அது கடல், வான்வழித்தாக்குதல் திறன் பெற்றிருப்பது இந்தியாவிற்குக் கவலையளிக்கிறது - என்றார்.

முதல்வர் கருணாநிதி தெரிவிக்கையில், இரு நாட்டுக் கடற்படைகளும் கூட்டுரோந்தை மேற்கொள்ள தமிழகம் ஆதரவளிக்கவில்லை. எனவே இது குறித்து மீண்டும் பேசவுள்ளோம் - என்றார்.

# யாழ்.ஆஸ்பத்திரியில் மீண்டும் 'சி.ரி.ஸ்கானர்' சிகிச்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே31

யாழ்.போதனா வைத்தியசாலையில் பழுதடைந்திருந்த "சி.ரி. ஸ்கானர்" இயந்திரம் திருத்தப்பட்டு சிகிச்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஏப்ரல் மாத முற்பகுதியில் இந்த சி.ரி.ஸ்கானர் இயந்திரம் பழுதடைந்திருந்தது. இதன் காரணமாக 'சி.ரி. ஸ்கானர்' செய்யவேண்டிய நோயாளிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் கொழும்பு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந்த இயந்திரத்தைத் திருத்துவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்ட இடைவிடாத முயற்சிகளை அடுத்து கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர்களினால் அது திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து கடந்த இருவார காலமாக 'சி.ரி.ஸ்கானர்' செய்யவேண்டிய நோயாளிகளுக்கான சிகிச்சைகள் தடையின்றி நடைபெற்று வருவதாகவும் போதனாவைத்தியசாலை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(அ-50)

# புதிய பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே31

இலங்கைப் போக்குவரத்து அமைச்சினால் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கென வழங்கப்பட்ட ஒரு தொகுதி பஸ்களைக் கையளிக்கும் வைபவரீதியான நிகழ்வு அண்மையில் கோண்டாவில் டிப்போவில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் கே.கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

எடுத்துவரப்பட்ட புதிய பஸ்களுக்கான சாவிகளை யாழ்.அரச அதிபர் பஸ்சாரதிகளிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் போக்குவரத்துச் சபையின் யாழ்.பருத்தித்துறை சாலைகளின் முகாமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (50)




கையளிப்பு வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படங்களில் ஒன்று இது.

# மந்திகையில் பால் உற்பத்தி விற்பனை நிலையம்

வடமராட்சி,மே31

பால் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தும் விற்பனை நிலையம் ஒன்று மந்திகையில் உள்ள அரசினர் மிருக வைத்திய நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் தலைவர் என். மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிலையத்தின் ஆரம்ப வைபவத்தில் இளைப்பாறிய கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் கே.தங்கராசா நிலையத்தைத் திறந்து வைத்தார். (202-160)

# வடமராட்சி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பற்றுச்சீட்டு வழங்கப்படுவதில்லை

உடுப்பிட்டி,மே31

வடமராட்சிப் பிரதேசத்தில் எரி பொருள்நிரப்பு நிலையங்கள் சிலவற்றில் பற்றுச்சீட்டுகள் வழங்கப்படுவதில்லை என நுகர்வோர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

பிரதேசத்தின் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பற்றுச்சீட்டு எழுதப்படுவதில்லை. சிலவற்றில் பற்றுச்சீட்டு எழுதப்பட்டாலும் அவற்றை நுகர்வோரிடம் வழங்காது தாமே வைத்திருக்கின்றர்.

இந்த விடயத்தைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர். (202-155)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இப்போது அதிகளவில்

யாழ்ப்பாணம்,மே31

தென்மராட்சி பிரதேசத்தின் பல பிரிவுகளில் சட்டவிரோதமாக வாகனங்களில் மணல் கொண்டு செல்லப்படுவதாகப் பிரதேச மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

வரணி, இடைக்குறிச்சி, மாசேரி, கரம்பைக்குறிச்சி, நாவற்காடு, கெற்பெலி, பாலாவி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து தினமும் 50 இற்கு மேற்பட்ட வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்களில் ஏற்றப்படும் மணல் வரணி, விரால் சந்தியூடாக வயல் வெளியில் உள்ள வீதியில் வலிகாமம் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

அண்மையில் மணல் ஏற்றிக்கொண்டு சென்ற பார ஊர்தி கடமைக்கு வந்துகொண்டிருந்த சாவகச்சேரி பிரதேசசபை பெண் உத்தியோகத்தரை மோதிவிட்டுத் தப்பியோடிவிட்டது. சிறுகாயங்களுக்கு இலக்கான அவர் வரணி மருத்துவமனை யில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

மணல் அகழ்வது தொடர்பாக அண்மையில் மாசேரிப் பகுதியில் இடம்பெற்ற தகராறொன்றில் வீடொன்று எரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-கடந்த வாரம் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பொலீஸாருடன் வந்து வரணி விராலிச்சந்தியில் காத்திருந்து மணல் ஏற்றிவந்த நான்கு வாகனங்களை பிடித்துள்ளார். (207)

# வல்வை மாவட்ட வைத்தியசாலையின் வைரவிழாக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு

கரவெட்டி,மே31

வல்வை மாவட்ட வைத்தியசாலையின் வைரவிழாவை இவ்வாண்டு சிறப்புற நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

வல்வெட்டித்துறையில் 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அன்றைய நகரபிதாவாக இருந்த முகாந்திரம் அப்புக்குட்டியாப்பிள்ளையால் இந்திராணி வைத்தியசாலை திறந்துவைக்கப்பட்டது.

தற்போது மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள இவ் வைத்தியசாலையின் வைரவிழா விரைவில் நடத்தப்படவுள்ளது.

இவ்விழாவை ஒட்டி அடுத்து வரும் ஒரு மாதத்திற்கு அனைத்து நோய்களுக்குமான சிகிச்சைகள், வைத்திய மருந்துச் செலவுகள் போன்றவை அனைத்தும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கென ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் சுகாதார அமைச்சின் அனுமதியுடன் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

(202-70)

# தென்மராட்சி தெற்கு விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம்

யாழ்ப்பாணம்,மே31

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் இவ்வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்வோருக்கு மானிய விலையில் உரம் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கைதடி நாவற்குழி விவசாயிகள் சம்மேளனம் மேற்கொண்டுள்ளது.

கடந்த வருட காலபோக நெற்செய்கையின்போது நெல்வயல்களின் உறுதிகள் அல்லது சட்டபூர்வ குத்தகைச் சீட்டு சமர்ப்பிக்காதவர்கள் மானிய விலையில் உரம் பெறுவதற்கு உறுதி அல்லது குத்தகைச்சீட்டு ஆகியவற்றைச் சமர்ப்பித்து உரிய விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யுமாறு சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர்.

(202-207)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே31

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் செ.சிவநடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் முதன்மை விருந்தினராகவும் உடுவில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (203)

* * *

யாழ்ப்பாணம்.மே31

யாழ்மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய திணைக்களங் களில் கடமை புரியும் சமூகசேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற இருக்கின்றது.

இதில் சகலரும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட சமூகசேவை அலுவலர் செ.கிருபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(1-75)

* * *

யாழ்ப்பாணம்.மே.31

யோசப்பாலாவின் 'உளமார' நூல் அறிமுகவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குடத்தனை கிறிஸ்து நற்தூது பணியகத்தில் இடம்பெறவுள்ளது.

அருட்சகோதரன் லூக் ஜோன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நூல் அறிமுக உரையை அருட்சகோதரன் ராஜன் றொகான் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து நூலின் முதற்பிரதியை அருட்தந்தை நிரூபன் நிஷாந்தன் அடிகளார் பெற்றுக்கொள்வார்.

ஆய்வுரையை மருதனார்மடம் இறையியற்கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை ஈ.பி.புனிதராஜா நிகழ்த்தவுள்ளார்.

(203)

* * *

யாழ்ப்பாணம்.மே 31

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை அதிபர்களுக்கு பாடசாலைமட்ட முகாமைத்துவம் தொடர்பான இருநாள் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இது நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(203-207)

# மருந்துக் கலவையாளர்களாக 26 பேருக்கு நாளைமுதல் நியமனம்

யாழ்ப்பாணம்,மே31

புதிதாகப் பயிற்சியை நிறைவு செய்துள்ள மருந்துக் கலவையாளர்கள் 26 பேருக்கு நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இந்த நியமனத்தையடுத்து குடாநாட்டில் உள்ள சகல அரச வைத்தியசாலைகளிலும் மருந்துக் கலவையாளர்கள் பணியில் இருப்பர்.

இதேவேளை-

வைத்திய சாலைகளில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றிய 40 பேர், இதற்கென நடத்தப்பட்ட பரீட்சை மூலம் பரிசாரகர்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனங்கள் நாளை வழங்கப்படும். (அ-50-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொதிகள் யாழ்.-கொழும்பு அல்லது கொழும்பு-யாழ். தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும். வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்கள் M.O.D பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப் படும்.

தொடர்பு:
EURO GROUP
077 3846998, 011 4542190

## கொழும்பு - யாழ் - கொழும்பு விமான சேவை

கொழும்பு - யாழ். விமானப் பயணிகளின் நலன் கருதிப் புதிய பயணிகள் விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

பொதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
EURO GROUP
077 3846998
011 4542190
(சி/52441)

## MATHS SPECIAL CLASS

Maniyarpathy Road,
Kokuvil West, Kokuvil.

தரம் 6 முதல் 11 வரை
ஆசிரியர்கள்:
S.J.Neethan (B.Sc)
K.V.Ruban (B.Sc)
ஆரம்பம் : 01.06.2007
வெள்ளிக்கிழமை
பிற்பகல் 4 மணி
அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.
தொடர்புகளுக்கு:
K.V.Ruban
(சி/52441)

## G.A.Q 2008 யாழ்.பல்கலைக்கழகம் (வெளிவாரி)

ஆங்கில இலக்கியம், ஆங்கில மொழியியல்

விரிவுரையாளர்கள்: சோ. பத்மநாதன்
திருமதி S.ஜெயலிங்கம்

விரிவுரைகள் ஆரம்பம்: 02-06-2007 காலை 8 மணி

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(61049)


# நீங்கா நினைவுகள்

| 12ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு | 4ஆம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| நாகமணி முத்துச்சாமி (திருமேனி) | முத்துச்சாமி பத்மநாதன் (றிக்கோ) | திருமதி முத்துச்சாமி சோதிஅம்மா |
| மண்ணில் 10.10.1916 விண்ணில் 15.06.1995 | மண்ணில் 05-04-1945 விண்ணில் 20-05-2004 | மண்ணில் 07-03-1923 விண்ணில் 14-06-2003 |

அன்பு எனும் சொத்தை பண்பு எனும் பொருளாக மதித்து எம்மை வழிநடத்திய எம் அன்புத் தெய்வங்களாகிய உங்களை நாம்நினைவு கூரும்போது எம்உறவுகளும் உங்களை நினைத்து எம்மண்ணில் எழுந்து அருள்பாலிக்கும் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீஞானவைரவரை நாள் தோறும் வேண்டிக்கொள்ளும்.

குடும்பத்தினர்.

மு.விமலநாதன்,
27/20, புங்கன்குளம் வீதி,யாழ்ப்பாணம்.
(60567)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 29 - 06 - 1935



ஆண்டவன் அடியில் 01 - 05 - 2007

அமரர்
## ஆறுமுகம் கார்த்திகேசு (கணேஷ்)

பாசமுடன் எம்மை வளர்த்து பார் புகழ வைத்தவரே
வாசமுள்ள மலரதுபோல் மணம் பரப்பி நின்றவேளை - எம்மை
வாடவைத்து வானுலகம் சென்றீரே!

கடந்த 01.05.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (31-05-2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாவடிப் பிள்ளையார் கோவில் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.
(610871)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

## 11ஆம் ஆண்டு

மலர்வு 15 * 08 * 1929



உதிர்வு 17 * 04 * 1996

### சிங்கத்துரை பிரான்சிஸ் (இரத்தினசிங்கம்)

## 31ஆம் நாள்

மலர்வு 09 * 04 * 1937



உதிர்வு 01 * 05 * 2007

### பிரான்சிஸ் திரேஸ்மலர் (பொன்ரெத்தினம்)

எங்களைப் பாசத்துடன் அரவணைத்து வளர்த்த குடும்பத் தெய்வங்களே!
எங்களை விட்டுப்போக மனம் கொண்டீர்களோ!
அப்பா அம்மா உங்களை என்றும் மறவோம்! ..ப்பிறப்பினும் மீண்டும்
எங்களுக்கு தந்தையாகவும் தாயாகவும் வேண்டுமென்று
புனித அந்தோனியாரை வேண்டுகின்றோம்.

கண்ணீருடன்....

| பிள்ளைகள்: | | மருமக்கள்: | பேரப்பிள்ளைகள்: |
|---|---|---|---|
| மென்டிஸ் | [ஜேர்மனி] | ரதி | ஸ்ரெபான், ஸ்ரெலானி |
| குயின்ரஸ் | [டென்மார்க்] | குமாரி | சபீனா,நிக்கிலான் |
| ராஜினி | [கொழும்பு] | பெர்ணான்டோ | மருன்சிங் |
| கலாஜினி | [டென்மார்க்] | குகதாஸ் | யூட், மௌன்சிங் |
| பிளேசியஸ் | [லண்டன்] | உதயராணி | |
| டெனிசியஸ் | [டென்மார்க்] | அமுதா | டென்சிங், டெல்றொவுண். |
| றொஜின் | [நோர்வே] | [illegible] | |
| டொறின் | [இத்தாலி] | | |

48/4, செபஸ்ரியன் வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(61104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# காட்டுச் சட்டங்கள் நாட்டுக்கு ஏன்?

''காட்டுச் சட்டங்களை எல்லாம் நாட்டில் நடைமுறைப் படுத்த முடியாது. அதற்கு எனது அரசு இடமளியாது.'' - என்று ஆவேசத்தோடு உறுதிமொழி கூறியிருக்கின்றார் நாட் டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

வன்னிக் காட்டில் நிலைகொண்டிருக்கும் தமிழீழ விடுத லைப் புலிகள் அங்கு நடைமுறைப்படுத்தும் சட்டங்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைமுறைப்படுத்த முடி யாது என்பதை அல்லது காட்டிலிருக்கும் பயங்கரவாதிகளின் சட்டங் கள் நாட்டில் நடைமுறைப்படுத்த இடமளிக்கப்பட மாட்டாது என்பதை ஜனாதிபதி மஹிந்தர் இவ்வாறு - இந்த வார்த்தைகளில் - கூறியிருப்பார் என்று கருதலாம்.

ஆனால், அதைத்தான் அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பிரதேச மக்களும், தென்னிலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களும் நாட்டின் தலைவரைப் பார்த்துக் கேட்க விழைகின்றார்கள் என்பதுதான் நிலைமை.

ஆட்கடத்தல்கள், அச்சுறுத்திக் கப்பம் அறவிடல், காணா மற் போகச் செய்தல், படுகொலைகள் என்று தமிழர்கள் எதிர்கொள் ளும் மோசமான மனித உரிமை மீறல்கள் நாகரிக உலகில் எந்த நாட்டின் நீதியான சட்டங்களுக்கும் அமைவானவை அல்ல என் பதை எண்ணி, மனம் வெதும்பிப் போயிருக்கும் தமிழர்களுக்கு, ஜனாதிபதியின் இந்தக் கூற்று அவர் தங்களைக் கிண்டல் - நையாண்டி - செய்கின்றாரோ என்ற எண்ணத்தையே தோற்று விக்கின்றது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று - உருத்திராட்சப் பூனையின் அஹிம்சை உபதேசம் போல - அந்தக் கூற்று அமைந்திருக்கின்றது என் பதே தமிழரின் கருத்து.

கொடூர இன மோதலும் யுத்தமும் இடம்பெறும் நாட்டில் மனித உரிமை மீறல்களும் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது தான். ஆனால் மனித உரிமை மீறல்களை வகை தொகையின்றி முன்னெடுக்கும் விதத்தில் அரச பயங்கரவாதத்தைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடுவதற்கு திறந்த 'லைசென்ஸ்' வழங்கும் விதமாக இன மோதலைச் சாட்டாகப் பயன்படுத்தக் கூடாது; பயன்படுத்த முடியாது.

கொழும்பிலும் வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கடத்தப்பட்டு அல்லது கைது செய்யப்பட்டு காணாமற் போகச் செய்யப்படுதலும், கடத்தப் பட்டோரின் பெயரால் பெருந்தொகைப்பணம் கப்பமாக அற விடப்படுதலும் சர்வ சாதாரண நிகழ்வுகளாக இங்கு இடம்பெறு கின்றன. கப்பம் கோருவோர் சாவகாசமாக பல்வேறு தொலை பேசிகளில் இருந்து அச்சுறுத்தல் அழைப்புகளை எடுத்து, சுளை யாகக் கோடி ரூபாக்களை அறிவிடுகிறார்கள். சில சமயங்களில் வங்கிக்கணக்குகள் மூலம் கப்பப் பணம் கைமாறுவதாகவும் தகவல்.

ஆனால் இதுபற்றி எல்லாம் பாதுகாப்புத் தரப்பினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டால் திருப்தி தரும் எந்த நடவடிக் கையும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆட்கடத்தல், கப் பம் அறவிடல் போன்றவற்றின் சூத்திரதாரிகளான 'கிரிமினல் களை' சட்டத்தின் முன் நிறுத்தும் உண்மையான திடசங் கற்பமோ, பற்றுறுதியோ பாதுகாப்புத் தரப்பினருக்கு இருப்ப தாக கிஞ்சித் தேனும் நம்புவதற்குத் தமிழர்கள் வெறும் முட்டாள்களல்லர்.

'காணாமல் போனோர் என்று கூறப்படுவோர் உண்மை யில் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர்' என்றும், பாதாள உலகக் குழுக்களும், புலிகளுமே ஆட்களைக் கடத்துகின்ற னர் என்றும் (அ)நியாயங்கள் கற்பித்து, இக்கடத்தல்கள், காணாமற் போதல் போன்ற மனித உரிமை மீறல்களை சமா ளிக்க முயல்வது அந்தக் குற்றங்களுக்கு உடந்தையாகும் கருத் தையே வெளிப்படுத்தும் என்பதை நாட்டின் தலைவர் புரிந்துகொள்ள வேண்டும்.

'விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தைப் பதில் பயங்கர வாதத்தால் முடக்குவது' என்ற புதிய - விநோத - விபரீத - கருத்து நிலைப்பாட்டின் கீழ் யாழ். குடாநாட்டிலும் பிற இடங் களிலும் கட்டவிழும் அராஜகம் உண்மையில் காட்டுச் சட்டங் களை நாட்டுக்குக் கொண்டு வரும் வேலையன்றி வேறில்லை என்பதையும் சுட்டிக்காட்டுவது பொருத்தம்.

கொழும்பில் இராணுவத் தளபதி மீது நடத்தப்பட்ட தற் கொலைக் குண்டுத் தாக்குதலின்போது, தற்கொலைத் தாக்கு தல் நபர் பயன்படுத்திய கைத்தொலைபேசியின் 'சிம்' கார்ட், மிகவும் சேதமடைந்து, ஒரு துண்டுப் பகுதியே கிடைத்தது என்றும், அதை வைத்துக்கொண்டு அந்தத் தொலைபேசி இலக்கத்தை நவீன தொழில்நுட்ப உத்தியால் கண்டுபிடித்து, இத்தாக்குதலின் பின்னணியில் புதைந்து கிடந்த சகல மர்மங்களையும் புலனாய் வாளர்கள் ஊடுருவிக் கண்டுபிடித்து விட்டனர் என்றும் புல னாய்வாளர்களுக்குக் கொழும்பில் புகழாரம் சூட்டப்படுகின்றது.

நல்லது. ஆனால் கொழும்பில் மேற்கொள்ளப்படும் ஆட் கடத்தல்கள், கப்பம் அறவிடுதல் போன்றவற்றின் கிரிமினல் சூத்திரதாரிகள் பயன்படுத்தும் தொலைபேசிகளின் முழு இலக் கங்களும் பாதுகாப்புத் தரப்புக்கு ஒழுங்காக வழங்கப் பட்டாலும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுவதில்லையே? யாரும் கைது செய்யப்படுகிறார்கள் இல்லையே? சம்பந்தப்பட்ட கைத்தொலை பேசிப் பாவனையாளர்கள் எவரும் மடக் கப்படுகின்றார்கள் இல் லையே? இது ஏன்?

நீதிபதி அம்பேபிட்டிய அண்மையில் கொழும்பில் படு கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கொலையாளிகள் பயன் படுத்தியதாகக் கூறப்படும் பொதுத் தொலைபேசி பற்றிய தக வலை மட்டும் வைத்துக்கொண்டு, கொலையாளிகளை இனங் கண்டு, மடக்கி, முழு மர்மத்தையும் விடுவித்து, கொலை யாளிகளுக்கு விரைந்து மரணதண்டனைத் தீர்ப்பும் வாங்கிக் கொடுத்த இலங் கைப் பொலிஸாருக்கு இந்த ஆட்கடத்தல் விவ காரத்தில் மட்டும் திறமை சித்திக்காமல் சிதறிப்போவது ஏன்?

மனமிருந்தால்தான் இடமுண்டு.(If there is a will, there will be a way).

தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறல்களைக் கட்டுப் படுத்தி அடக்கி, குற்றவாளிகளைத் தண்டிக்கும் பற்றுறுதி அர சுத் தலைமைக்கு இருந்தால்தான் அதற்கான வழி கிட்டும். உண் மையான விருப்பம் - திடசங்கற்பம் - தீர்மானம் - இல்லாமல் பயன்தரு நடவவடிக்கை இல்லை.

காட்டுச் சட்டங்கள் எல்லாம் நாட்டுக்கு வரக்கூடாது என் றால் அதற்கான தீர்மானம் உண்மையில் முதலில் அரசுத் தலை மைக்கு ஏற்பட வேண்டும் - வார்த்தைகளில் அல்ல - உதட்டள வில் அல்ல - உண்மையில் உள்ளத்து அளவில்! ஜனாதிபதியின் வார்த்தையை அத்தகையதாக எடுத்துக் கொள்ளலாமா?

# யாழ்.நகரின் எல்லைகளில் வைத்து நேற்றுக்காலை திடீர் சோதனைகள்

யாழ்ப்பாணம்,மே31

யாழ்.நகரப் பகுதியில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகள் காரணமாக போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

அதனால் பொதுமக்கள் பலரும் காலதாமதமாக தமது அலுவல்களுக் குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட் டது. மாணவர்கள் பாடசாலைக்குப் பிந்தியே சென்றனர்.

யாழ்.நகருக்குப் பிரவேசிக்கும் அனைத்து வீதிகளிலும் நேற்றுக் காலை படையினரும் பொலீஸாரும் ஒன்று சேர்ந்து சோதனை நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

பஸ்களில் சென்ற பயணிகள் உட் பட வீதியில் பயணம் செய்த அனை வரும் மறிக்கப்பட்டு அடையாள அட்டை சோதனைக்கும் உடற் பரி சோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் பயணம் செய்த பஸ்களும் சில இடங்களில் சோதனையிடப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கை கார ணமாக அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் தமது கடமைகளுக்குத் தாமதமாகச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்ப மான இந்தச் சோதனை நடவடிக்கை காலை 10 மணிவரையும் மற்றும் சில இடங்களில் அதற்குப் பின்னர் வரை யும் நீடித்தது. (அ-15-78-50-160)

### முகவர் நிலையங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நீக்க

# உதவி வழங்கும் நிறுவனங்களுக்கான வழிகாட்டி நெறிக் கோவை வெளியானது

கொழும்பு,மே31

மனிதாபிமான மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கு இலங்கைக்கு உதவிகள் வழங்கப்படும்போது நன்கொடை வழங்கும் பிரதான நாடுகள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிக்கோவை ஒன்றை அந்நாடுகள் கையெழுத்திட்டு வெளி யிட்டுள்ளன.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து, இந்நாட்டின் இனப் பிரச்சினையை மேலும் தூண்டி விடுவ தாக உதவி வழங்கும் அமைப்புகள் மீது இப்போது அடிக்கடி குற்றஞ்சாட் டப்பட்டு வருகிறது.

அத்தகைய குற்றச்சாட்டுக்க்ளை முறியடிக்கும் பொருட்டு வழிகாட்டு நெறிக் கோவையை உதவிபுரியும் நாடுகள் வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு சுமார் 90 சதவீத உதவிகளை வழங்கும் இந்த உதவி வழங்கி வரும் முகவர் அமைப்புகள் நேற்றுமுன்தினம் ஐரோப்பிய ஆணைக் குழுவின் அலுவலகத்தில் நடத்திய ஊடக மாநாட்டில் இலங்கை மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஒன்றாக பணிபுரிவதென்ற தமது அர்ப்பணிப்பை மீளவும் உறுதிப்படுத் திக் கூறினார்கள்.

இந்த வழிகாட்டு நெறிக்கோவை யில் பாகுபாடு காட்டாமை பாரபட்சம் இன்மை, மனித கண்ணியத்தை மதித் தல், வெளிப்படைத் தன்மை, பொறுப் பேற்கும் தன்மை, நீடித்திருத்தல் மற் றும் ஆயத்தமாய் இருத்தல், கலந்து ரையாடல், பங்கேற்றல், ஒருங்கிணை தல் போன்ற அம்சங்கள் வலியுறுத் தப்பட்டுள்ளன.

இந்த வழிகாட்டு நெறிக் கோவை யில் ஐக்கியநாடுகள், ஐரோப்பிய ஆணைக்குழு, ஆஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, கிறீஸ், ஜப்பான், நெதர் லாந்து, நோர்வே, தென்கொரியா, சுவீடன், சுவிற்சர்லாந்து, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

உதவி வழங்கும் நாடுகள் தமது முகவர்கள், தொண்டு நிறுவனங்கள் ஊடாக இலங்கையில் மேற்கொள் ளும் பணிகளை சுட்டிக்காட்டுவதும், பணிகளில் மேற்கொள்ளப்படும் ஆக்க பூர்வமான அணுகுமுறையையும் இலங்கை மக்களுக்கு உறுதிபட எடுத் துக்காட்டுவதே இந்த வழிகாட்டுநெறிக் கோவை வெளியிடப்படுவதற் கான காரணம் என்று ஐரோப்பிய ஆணைக் குழுவின் தலைவர் ஜூலியன் வில் சன் ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த வழிகாட்டு நெறிக்கோவை இலங்கைக்கென புதிதாக தயாரிக்கப் பட்ட ஒன்றல்ல. அவை அனைத்துலக மட்டத்தில் உதவிப் பணிகள் தொடர் பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங் கள். அரசு சாரா அமைப்புகள், செஞ் சிலுவைச் சங்கம், செம்பிறைச் சங்கம் ஆகியவற்றுக்கான சர்வதேச நடத்தை நெறிகளில் உள்வாங்கப்பட்டவை என்றார் அவர்.

உதவி வழங்கும் அமைப்புகள் பற் றிய குற்றச்சாட்டுகள் உண்மையான வையல்ல என்றும் வில்சன் தெரிவித் தார். (ப)

## கப்பலில் தவறவிட்ட பொதி பொலீஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம்,மே31

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை வந்தடைந்த பயணிகள் கப்பலில் தவறவிடப்பட்ட பொதி ஒன்று தெல் லிப்பழை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதியை உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற் றுக்கொள்ளுமாறு தெல்லிப்பழை பொலீஸார் கேட்டுள்ளனர். (அ-1)

## மதிய உணவு அதிக விலைகளில்

யாழ்ப்பாணம்,மே31

உணவகங்களில் அரைப்பார்சல் சாப்பாடு 40 ரூபாவுக்கும் முழுப் பார் சல் சப்பாடு 60 ரூபாவுக்கும் விற் பனை செய்யப்படவேண்டும் என்று அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். எனினும் யாழ். நகரில் ஒரு சில உண வகங்களில் குறிப்பிட்ட விலைகளை விட அதிக விலைகளில் விற்கப்படு கின்றன.

அரைப்பார்சல் சாப்பாடு 50 ரூபா வுக்கும் முழுப்பார்சல் சாப்பாடு 70 ரூபாவுக்கும் அந்த உணவகங்களில் விற்பனைசெய்யப்படுவதாக நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர். (1-202)

## மத்திய அரசு ஊழியர் விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம்,மே31

வெளிமாவட்டங்களில் பணியாற்றி தற்சமயம் யாழ்.மாவட்டத்தில் தங்கி யுள்ள மத்திய அரசின் ஊழியர்களின் விவரங்கள் திணைக்கள ரீதியாகச் சேகரிக்கப்பட உள்ளன.

இந்த விவரங்கள் அவசியமாகத் தேவை என்பதால் செயலகத்தால் வழங் கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் விவ ரங்களைப் பதிந்து ஒரு வாரத்துக்குள் மேலதிக அரச அதிபருக்கு அனுப்புமாறு அரசஅதிபர் கேட்டுள்ளார். (அ-1)

## வல்வெட்டியில் ஆயுதங்கள் மீட்பு

உடுப்பிட்டி,மே31

வல்வெட்டி பங்குதன் குடியிருப் பில் நேற்றுமுன்தினம் படையினர் தேடுதல் மேற்கொண்டனர்.

தேடுதலின் போது அந்தப் பகுதி யில் உள்ள பதுங்குகுழி ஒன்றில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக பொலீ ஸார் தெரிவித்தனர். (1-155)

## தாவீது அடிகள் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,மே31

அமரர் கலாநிதி தாவீது அடிகளா ரின் 26 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். கோயில் வீதி யில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத் தில் நடைபெறவுள்ளன.

ஞானம் தமிழ்த்தூது தாவீது மன்ற மும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டமும் இணைந்து நடத்தும் இந் நிகழ்வில் அடிகளாரின் ஆன்மா சாந்தி பெற வேண்டி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (1-202)

## பிரிவுபசார விழா

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத் தில் கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களுக்கான பிரிவுப சார விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ் வரன் தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு அலுவலக மாநாட்டு மண்ட பத்தில் மேற்படி பிரிவுபசார விழா நடைபெறவுள்ளது. மொத்தம் 13 ஊழியர்கள் இந்நிகழ்வில் கௌரவிக் கப்படுவர். (203-51)

## நாவாந்துறை இளைஞனைக் காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே31

நாவாந்துறையைச் சேர்ந்த இளை ஞர் ஒருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாவாந்துறையைச் சேர்ந்த என்.ஸ்ரீ பன்(வயது 27) என்ற இளைஞனே காணாமற்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 15 ஆம் திகதி கடற்றொழி லுக்காகப் புறப்பட்டுச் சென்ற இவர் வீடு திரும்பவில்ல என தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ-50)

# பிரதேச வைத்தியசாலைகளுக்கு போதிய மருந்து வகைகள்

யாழ்ப்பாணம்,மே31

குடாநாட்டில் உள்ள பிரதேச அரச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் தற்போது போதிய ளவு எடுத்துவரப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பா ளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதனால் வைத்தியசாலைகளில் நிலவிய மருந்துப் பற்றாக்குறை நீங்கி யுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இரண்டாவது காலாண்டுக்குரிய மருந்துகள், ஆயுள்வேத மருந்துவகை கள், திரிபோசா சத்துணவு மற்றும் சுகா தார சேவை உத்தியோகத்தர்களுக் கான சீருடைகள் என்பன 'இந்துருவலி' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன, மூன்றாவது காலாண்டுக்குரிய மருந்து கள் 'றுகுணு' கப்பலில் எடுத்து வரப் படுகின்றன - என்றும் அவர் கூறினார்.

எடுத்துவரப்பட்ட மருந்துவகை கள் எல்லா அரச வைத்தியசாலை களுக்கும் தேவைக்கேற்ப அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (அ-50)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 18 | வெள்ளிக்கிழமை 01.06.2007 |
| திதி: | பூரணை காலை 7.01 |
| நட்சத்திரம்: | [illegible] முற்பகல் 7.56 |
| சுபநேரம் | : 05.52 - 07.22 |
| ராகுகாலம் | : 10.22 - 11.52 |

## இன்று

யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக் கான அழகியல் போட்டிகள் இன்று வியா ழக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளதாக யாழ். வலய அழகியல் கல்வி உதவிப் பணிப்பாளர் தெரிவித் தார். (111)

* * *

சாவகச்சேரி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் அகத்தியர் தேவாரப் படிப்பு, திருவாசக முற்றோதல் ஆகிய நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும். (207)

* * *

கல்வயல் புலுட்டையன் பிள்ளை யார் அறநெறிப்பாடசாலை அங்கு ரார்ப்பண நிகழ்வு இன்று வியாழக் கிழமை நண்பகல் 12 மணிக்கு நடை பெறவுள்ளது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பாடசாலையை அங்குரார்ப் பணம் செய்துவைப்பார். (207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிடம் இராணுவ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ அங்கு, இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுரேஷ் மேத்தா, இராணுவத் தளபதி ஜெனரல் ஜே.ஜே.சிங் மற்றும் மூத்த பாதுகாப்புஅதிகாரிகளுடன் கடந்த மூன்று தினங்களாகப் பேச்சு நடத்திய பின்னர் நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

புதுடில்லியில் இந்திய உயர் தரப்போடு தாம் நடத்திய பேச்சுகளின் போது, விடுதலைப் புலிகளால் தற்போது இலங்கை அரசுப்படைகளுக்குப் புதிதாக ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்தும், அவற்றைச் சமாளிப்பதற்குத் தங்களுக்குத் தேவைப்படும் ஆயுத தளபாடங்களின் பட்டியல்கள், இராணுவ உதவிகள் மற்றும் பாக்கு நீரிணையில் இந்திய - இலங்கைக் கடற் படையின் கூட்டு ரோந்து ஆகியவை குறித்தும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விரிவாகப் பிரஸ்தாபித்தார்.

இந்தியா, ஏற்கனவே இலங்கைக்குப் பரந்த அளவிலான இராணுவத் தளபாட உதவிகளை வழங்கி வருகின்றது. தாழப் பறக்கும் விமானங்களைக் கண்டு பிடிப்பதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட இரண்டு 'ரடார்' கருவிகளுக்கு மேலதிகமாக தற்போது புதிதாக வழங்கப்பட்ட இரு 'ரடார்' கருவிகளும் அவற்றில் அடங்கும்.

சில தினங்களுக்கு முன்னர் இந்திய விமானப்படையின் ஏ. என். - 32 ரக விமானம், இரகசியப் பயணம் ஒன்றைக்கொழும்புக்கு மேற்கொண்டு சில இராணுவத் தளபாடங்களை வழங்கிவிட்டுத் திரும்பியிருக்கின்றது.

**இந்தியாவின் கண்காணிப்பு வலைப்பின்னல்**

இலங்கை விவகாரத்துக்குள் பாகிஸ்தான் அதிகளவில் தலையை நீட்டிக்கொள்வதைத் தவிர்க்கச் செய்வதற்காக, இலங்கைக்கான இராணுவத் தளபாட உதவிகளை இந்தியா அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்திருக்கின்றது.

கடந்த பெப்ரவரி நடுப்பகுதியில் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட படகு ஒன்று தமிழ்நாடு கரையோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, பாக்கு நீரிணையிலும், மன்னார் வளைகுடாவிலும் தனது கடற்படையின் ரோந்துச் செயற்பாட்டை 'ஒப்பரேஷன் டாஷா' என்ற கடற்படை நடவடிக்கைப் பெயரில் இந்தியா தீவிரப் படுத்தியிருக்கின்றது.

கடந்த மார்ச் - ஏப்ரலில் இலங்கைப் படை முகாம்கள் மீது புலிகள் நடத்திய விமானத் தாக்குதல்களை அடுத்து இந்தியப் பாதுகாப்புப் படைகள் தமது எல்லையோரத்தில் 'பல அடுக்கு கண்காணிப்பு மற்றும் ரடார் வலைப்பின்னலை' ஏற்படுத்திக் கொண்டமையும், இந்தியக் கடற்படை, இஸ்ரேல்தயாரிப்பு ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் வான்வழிக் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கவை.

''இலங்கைக் கடற்படையுடன் கூட்டிணைவாக ஏற்கனவே ரோந்து நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். அகதிகள் நாட்டுக்குள் நுழைவதைக் கண்காணிப்பதற்கு அப்பால், புலிகள் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கடத்துவதைத் தடுப்பதும் இதன் நோக்கம். நாடு அல்லாத ஓர் அமைப்பினால் ஏற்படுத்தக் கூடிய விபரீதங்களைத் தவிர்க்கச் செய்வதற்காகக் கரையோரத்தில் தீவிரக் கண்காணிப்பைப் பேணுவது அவசியமாகின்றது.'' - என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவின் கூடுதல் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் எண்ணத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன, இந்தியாவின் அணு உலைகள் மற்றும் இந்து சமுத்திரத்தில் பயணிக்கும் இந்தியக் கப்பல்கள் போன்றவற்றைக் கூடப் புலிகளின் வான் பிரிவு தாக்கலாம் என்று அண்மையில் பிரகடனப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் -

''அரச சார்பற்ற தரப்புகளால் எமது அயல் பிரதேசங்களில் அதிகரித்துள்ள பல்பரிமாண அச்சுறுத்தல்களும், அத்தகைய நேர்வுகளை எதிர்கொள்ளும் வாய்ப்புகளும்'' - என்ற தலைப்பில் - இந்தியக் கடற்படையின் மூத்த அதிகாரிகள் பங்கு கொண்டு கருத்துப் பரிமாறி ஆராயும் - கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாயன்று விசாகப்பட்டினத்தில் தொடங்கியிருக்கின்றது.

- இவ்வாறு புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன. (உ)

# மருவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் குறித்து ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்டுள்ள தகவலில்-

வழமையான சுத்திகரிப்புப் பணியில் படையினர் ஈடுபட்டிருந்த வேளை, ஊடுருவி வந்த விடுதலைப் புலிகளுக்கும் படை யினருக்கும் இடையே மோதல் இடம் பெற்றது.

இம்மோதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர்.

புலிகளுக்குப் பலத்த இழப்பு ஏற்பட்டது. அது தொடர்பான தகவல் கிடைக்கவில்லை

- என்று பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (அ-1)

# மக்கள் வங்கியில் ஏலவிற்பனை

யாழ்ப்பாணம், மே 31

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்தியத்தில் உள்ள கிளைகளில் 31.12.2005இற்கு முன்னர் அடகு வைத்தவர்களின் நகைகள் ஏலத்தில் விடப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

ஸ்ரான்லி வீதிக் கிளையில் எதிர்வரும் 2,3,9,10 ஆம் திகதிகளிலும்-

நெல்லியடிக் கிளையில் எதிர்வரும் 9,10 ஆம் திகதிகளிலும் - ஏலத்தில் நகைகள் விற்பனை செய்யப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் ஒரு பெண் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றும் முற்பகல் 11 மணியளவில் புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக வன்னிச் செய்திகள் தெரிவித்தன. எனினும் சேத விவரங்கள் தெரியவில்லை. (அ-1)

# விருதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல்கள் மூலம் இலங்கையில் அரசு மனித உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்று சர்வதேச மட்டத்தில் பொய்க்குற்றஞ் சாட்டுவதே புலிகளின் பிரதான நோக்கம்.

அதாவது புலிகள் இவ்வாறு தொடர் தாக்குதல்களை நடத்தினால் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசு தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கையில் ஈடுபடும். சந்தேகத்திற்கிடமானவர்களைக் கைது செய்யும். இவை தவிர்க்க முடியாதவை.

அரசின் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையை மனித உரிமை மீறல்கள் என்று சர்வதேச நாடுகளுக்குப் பொய்யாகக் காட்டுவதே புலிகளின் நோக்கம்.

இரத்மலானையில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் பிரதான இலக்கு மக்களேதான். இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நேரம் பிற்பகல் 5.45. இது அனைவரும் அலுவலகத்தில் வேலை முடித்து வரும் நேரம். 07 சிவிலியன்கள் இத்தாக்குதலில் இறந்தனர்.

இது பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பது உறுதி. புலிகள் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்வது ஒன்றும் புதிதல்ல. புலிகளுக்கு இவை சாதாரணம்.

புலிகளின் இந்த வன்முறை நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். நாடாளுமன்றில் புலிகளுக்கு ஆதரவாக அறிக்கைகளை விடுக்கின்றனர். - என்றார். (சி)

# ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதை திறக்கப்பட்டமை தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினர் செய்திக் குறிப்பு ஒன்றை நேற்று விடுத்துள்ளனர்.

2002 யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் இந்தப் பாதைகளை மூடுவதோ திறப்பதோ இருதரப்புகளின் பொறுப்பாகும்.

இருதரப்புகளும் பொதுமக்களின் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு, நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாகப் பாதையைத் திறக்கவேண்டும். இந்த அடிப்படையில் மனிதாபிமானப் பணிக்காக நாம் செயற்படுகின்றோம்.

இந்த வருடத்தில் இரண்டு பாதைகள் ஊடாகவும் 25 ஆயிரம் மக்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர்- என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனுராதபுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அநுராதபுரத்தில் பொசன் நிகழ்வு இடம்பெறவுள்ளது. அங்கு புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும். பொசன் நிகழ்வில் கலந்துகொள்ளும்மக்கள்மிகவும்விழிப்புடன் இருக்கவேண்டும். - என்றார் பிரிகேடியர்.


## Calling for Tenders -Teaching Hospital, Jaffna
**Repairs to Hospital Canteen**

1.The Chairman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for repairs to hospital canteen upto 10 a.m. on 08.06.2007. Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 05.06.2007 on payment of non refundable deposit of 600/=

2.Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

3.Tender forms are issued only to contractors having valid registration in grade M 9 and above in the field of building construction and other Institute of Construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka.(NCCASL)

4.Sealed tenders may be despatched either by registered post or hand delivered to Director, T.H. Jaffna or deposited in the tender box at Teaching Hospital; Jaffna on or before 10 a.m on 08.06.2007.

5.Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB, T.H., Jaffna.

6. For further details please contact Hospital Secretary,T.H.Jaffna.

The Chairman,
Divisional Tender Board, Teaching Hospital,
Jaffna.
Date: 30.05.2007.

**PERSONAL CLASSES** 364,Stanly Rd, Jaffna
மீண்டும் ஆரம்பம்
தமிழ் - திரு.K.தர்மராஜா
B.A Final (PER.) 8-9
G.A.Q - (Ja) வினாவிடை 12-1
A/L 2007 Mon, Wed 2.30 - 4
அரசியல் -திரு. பொன். சந்துரு
Hin.Cu. -திரு. சத்தியதாசன்
G.A.Q. BA-I, English Revision & Paper 1-2 p.m,8-9 a.m.
ஆரம்பம்: 02.06.2007 காலை 8 மணி

**நாகம்ஸ் சினிமா - சுன்னாகம்**
விஜய், அசின், வடிவேல் நடித்த
(தீலஸ்) **போக்கிரி**
தினசரி : 11மணி, 3மணி.


**தவறிவிட்டது**
யாழ்.நகரப்பகுதியிலிருந்து மானிப்பாய்க்கு இடையில் ஒரு பார்சல் 29.05.2007 அன்று தவறிவிட்டது. தயவு செய்து அதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 021 222 6499

**விற்பனைக்கு உண்டு**
மலிவான, தரமான கோழி இறைச்சியை (ஐஸ்) பெற்றுக்கொள்ள உடனே நாடுங்கள்.
**ஆதவன் களஞ்சியம்**
இல.328, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 8418, 0777 874708
குறிப்பு: விநியோக முகவர் தேவை.

**அஸ்ரன் உயர்கல்விப் பிரிவு**
நாவலி வீதி, ஆனைக்கோட்டை. Navali Rd, Anicoddai.
T.P.: 021 222 4031
கலை, வர்த்தகப் பிரிவுகள்-2009
Tam:- A.V.M.S.அமரசிவம்
Hi.Cu:- P.பிரபாகரன்
Logic:- J.அருட்செல்வம்
Geo:- S.T.நிமல்ராஜ்
Dra:- N.நிஷாந்தன்
Chi:-K.மேரி சிறிஸ்ரல்லா
Acc:- S.தவா
Bn.St. T.ரூபன்
Eco:- N.செந்தூரன்
Eng:- V.பிறேம்குமார்
வடமராட்சியின் முன்னணி ஆசிரியர் அஸ்ரனில் உதயம்
தமிழ் A.V.M.S. அமரசிவம்
2007 மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள் ... பதிவு செய்யுங்கள்

**அதிரடி விலைக் கழிவில்...**
★கையடக்கத் தொலைபேசிகள் உத்தரவாதத்துடன் குறைந்த விலையில் விரும்பிய மொடல்களில் பெற்றுக் கொள்ளவும்
(தமிழில் தகவல்களை பரிமாறக் கூடிய வசதிகள் உண்டு)
★GSM மேசைத் தொலைபேசிகள்
நோக்கிய பற்றி - 600/=
★கையடக்கத் தொலைபேசி உதிரிப்பாகங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளவும்
★அனைத்துவிதமான கைக்கடிகாரங்கள், றேடியோக்கள் என்பவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும்.
★சிறந்த முறையில் கையடக்கத்தொலைபேசிகளை பழுது பார்த்திடவும் நாடவேண்டிய இடம்.
★பயலொக் பில் (Bill) கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.




**நியூ பவர் செலூலர் ரிரேடிங் கம்பனி**
205/01, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்
(ராஜா தியேட்டருக்கு அருகில்)
தொலைபேசி: 0773 518330, 0776660289
இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.


## கண்ணீர்க் காணிக்கைகள்

அமரர் **வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை**
(சமாதான நீதிவான்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டவரும் மாவைக்கந்தன் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினருமாகிய அமரர் **வன்னித்தம்பி வயிரவப்பிள்ளை** (J.P) அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த மனவருத்தம் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய மாவைக்கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிக்கனக் கூட்டுறவுச் சங்கத்தினர்,
மாவிட்டபுரம்.

(61134)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் வீதிப் பரிசோதகர்- இ.போ.ச)



வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை கந்தசாமி நேற்று (30.05.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை -ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் இராசமலரின் (மையினா) அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெல்லிப்பழை வீதி,
வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
க.ராதாகிருஷ்ணன்.
(மகன்)

(61135)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org